இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 6
இறுதிப் பரீட்சை – 2006/2007
தீங்கியல் சட்டம் - LWU 3326/ 4326
காலம்: மூன்று மணித்தியாலம்

திகதி: 29.03.2007 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. "-----ஒப்பந்தம் என்ற முழுமையான அடிப்படையில் அன்றி விசேட திறமையுள்ள எவரேனும் ஒரு நபர் ஏதேனும் வேலையொன்றை பொறுப்பேற்கும் போது அவருடைய அத்தகைய திறமையில் தங்கியிருக்கும் ஏனைய நபருக்கு அனுசரனை வழங்கும் நோக்குடன் அத்திறமையை பிரயோகிக்கின்ற விடத்து கவனக் கடப்பாடு ஒன்று தோன்றும் என்பது தற்போது அவதானத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கியமான நிகழ்வு ஒன்றென கருதப்படல் வேண்டும்----"

Lord Morris, in *Woods* vs *Martins Bank Ltd* (1995) 1 QB 55

கவனையீனமான பிறழ் கூற்று தொடர்பான சட்டத்தின் தற்போதைய நிலையை இக்கூற்று பிரதிபலிக்கின்றதா? இயைபான தீர்ப்புச்சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

2. பிரபல பலட் நடனக்காரியான ஜயனி, ஏல விற்பனையில் வாங்கிய பெறுமதி மிக்க சிலை ஒன்றை எடுத்துக்கோண்டு மகேனுடன் அவனுடைய மோட்டார் சைக்கிளில் வீட்டை நோக்கி பயணித்துக் கொண்டு இருந்தாள். கவனையீனமாக வாகனத்தை செலுத்தி வந்த நலின் மகேனுடைய மோட்டார் சைக்குளுடன் மோதினான். விபத்தின் விளைவாக மகேன், ஜயனி இருவரும் வீதியில் விழுந்தனர். ஜயனி வீதியிலேயே உதவியற்று விழுந்து இருந்த போது, குறிப்பிட்ட நேரத்தில் வாகனத்தை நிறுத்திக்கொள்ள இயலாமல் போன லொறிச் சாரதி ஜயனுடைய வலது காலுக்கு மேற்புறமாக லொறியை செலுத்தினான். அவ் வழியை கடந்து சென்று கொண்டிருந்த சித்தத் அவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றான்.

வைத்தியசாலையில் வைத்து ஊசி ஏற்றப்பட்ட போது இருதய நோயாளியான மகேன் மோசமான நிலைக்கு ஆளானான். மூன்று நாட்களுக்கு பின்பு அவன் இறந்தான். ஜயனியினுடைய வலது கால் தொழிற்படாததன் நிமித்தம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட சில நடன நிகழ்ச்சிகளை அவளால் நிறைவேற்ற இயலாமல் போனது. விபத்து நடந்த போது அவ்வழியே கடந்து சென்ற ஒருவனால் பெறுமதி மிக்க சிலை திருடப்பட்டது.

ஜயனி, மகேன் ஆகியோர் தொடர்பில் நலினுக்கு இருக்கக்கூடிய பொறுப்புடமையை ஆராய்க.

3. "பங்கு கவனையீனம் அல்லது இசைந்தது தீங்காகாது என்ற இரண்டு எதிர் காப்புக்களில் எதுவுமே வழக்காளியை முழுமையாக தோல்வியடைய செய்யும் வரையில் இவ்விரண்டு பதுகாப்புகளுக்கும் இடையில் திட்டவட்டமான வேறுபாட்டை

காணுதல் கல்விசார் வகையிலான அக்கறைக்கு மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது. எனினும் பங்கு கவனையீனத்தின் கீழ் நட்டஈட்டை பங்கிடும் கொள்கையை அறிமுகப்படுத்தலானது ஆபத்தை விரும்பி ஏற்றல் என்ற பாதுகாப்பை எதிர்காலத்தில் முழுமையான எதிர்காப்பு ஒன்றாக பயன்படுத்துவதில் பாரிய சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளது. கவனையீனமான நடந்த வழக்காளியை அவ்வாறு கவனையீனமற்று இருந்த வழக்காளியை விட நல்ல நிலையில் வைத்திருத்தல் வித்தியாசமான தன்மையை தோற்றுவித்துள்ளது. இந்த பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பதிலளிப்புகள் மூலம் தற்போது மிக அரிய சந்தர்ப்பங்களில் மட்டும் வெற்றி அடைய செய்யக்கூடிய நிலையை தோற்றுவித்துள்ள இசைந்தது தீங்காகாது என்ற எதிர் காப்பிற்கு முன்னரை விட இறுக்கமான தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன".

John G.Flerming, The Law of Torts, pg 264

உமது விடையில் தீர்ப்புச்சட்டங்களை குறிப்பிட்டு இசைந்தது தீங்காகாது என்ற எதிர் காப்பின் அபிவிருத்தியை மேற்போந்த கூற்றுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

4. அமல், கமல் மற்றும் ரமால் ஆகியோர் 'தொழில் சார் சுழி ஓடல் கழக'த்தினால் பயிற்றுவிக்கப்படுகின்ற நிபுணத்துவம் பெற்ற Scuba சுழியோடிகளாவார். சுழியோடல் கழகத்தில் இணைந்து கொண்ட போது அவர்களிடம் வழங்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் பின்வரும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

(i) எச்சரிக்கை – Scuba சுழியோடல் ஆபத்தானது. விண்ணப்பதாரிகள் தமது சொந்த ஆபத்தின் பேரிலே கழகத்தில் இணைகிறார்கள்.

(ii) பயிற்சி நேரங்களின் போது பயிலுநர்களுக்கு ஏற்படுகின்ற ஆள்சார் ஊறு அல்லது இறப்பிற்கு கழகமோ அல்லது பயிற்சிப்பாளர்களோ பொறுப்பல்ல என்பது ஒரு நிபந்தனை.

(iii) அனைத்து உபகரணங்களும் கழகத்தினால் வழங்கப்படும்

ஒருநாள் மொகான் என்ற பயிற்றுவிப்பாளருடன் பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்த போது கடல் மிக ஆக்ரோஷமாக இருந்ததால் பின்வரும் சம்பவங்கள் நடைபெற்றன.

(அ) அமலுக்கு பொருத்தப்பட்டிருந்த ஒட்சிசன் தாங்கி ஒழுங்காக பொருத்தப்படாமையால் அமல் மூச்சு திணறலுக்கு உட்பட்டு இறந்தான்.

(ஆ) கடலில் ஏற்பட்ட சுழியின் காரணமாக கமல் வேறுபட்ட பாதையில் எடுத்துச்செல்லப்பட்டான். அவன் பெரிய பாறை ஒன்றில் மோதி அவனது முதுகுகெலும்பு முறிவடைந்தது.

(இ) போதைப்பொருள் பாவித்திருந்த ரமால் பாதுகாப்பு கவசம் இன்றி சுழி ஓடினான். அவன் ஒரு பாறையை நோக்கி சுழி ஓடியபோது தலைக்காயங்களுக்கு உட்பட்டான்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் சுழி ஓடல் கழகத்திற்குள்ள பொறுப்புடமையை ஆராய்க.

5. “பகரப்பொறுப்பு என்ற கருத்தேற்பு ஏதேனும் தெளிவான தர்க்க ரீதியான அல்லது சட்ட கொள்கை அடிப்படையில் அன்றி சமூக வசதி மற்றும் கரடுமுரடான நீதி என்ற வகையில் வளர்ச்சி அடைந்த கோட்பாடு ஒன்றாகும். அதி கூடிய நன்மையை கருத்தில் கொண்டு சேவையில் வேலையாளை ஈடுபடுத்தும் தொழில் தருநர் தன்னுடைய வேலையாளுடைய வேலையின் எல்லைக்குள் மிக அரிதான சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற அனைத்து தீங்குகள் தொடர்பாக முழு உலகிற்கும் பொறுப்பு சொல்லக்கூடியவர் ஆவர்”.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? இந்த இலக்கிற்கு விளைவுப்பயன் வழங்கக்கூடிய வகையில் பகரப்பொறுப்பு தொடர்பான சட்டம் எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை ஆராய்க.

6. தனியார் பஸ் உரிமையாளர்கள் தமது மத்திய பஸ் நிலையத்தையும், வேலை பட்டறையையும் கொழும்பில் இருந்து 20 கி.மீ பிரதேச எல்லைக்குள் வைத்திருக்க வேண்டுமென தனியார் பஸ் சட்டம் அனுமதி அளித்தது. டேவிட் சில்வா பஸ் கம்பனி தமது பஸ் நிலையத்தையும், வேலைப் பட்டறையையும் ரத்மலானையில் சேனகவுடைய வீட்டுக்கண்மையில் அமைத்துக்கொண்டது. இதன் விளைவாக பெரும் எண்ணிக்கையான மக்கள் இவ்விடத்தில் குழுமுவதால், ஏற்பட்ட சத்தம் காரணமாக சேனக பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்பட்டான். பஸ் நிலையம் மற்றும் தொழில் பட்டறையில் இருந்து வெளியேறுகின்ற புகையினால் தன்னால் நடத்தப்படுகிற சலவை தொழில் சேவைக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்பட்டுள்ளமையை சேனக கண்டுபிடித்தான். மேலும் பஸ்களில் இருந்து வெளியேறும் புகையினால் உலர விடப்படுகின்ற துணிகளில் கறுப்பு நிற தூசி படிந்து உடைகள் பாதிப்புற்றிருந்ததை கண்டு பிடித்தான். ஒரு நாள் மதிய வேளை சேனகவினுடைய மகன் இரத்த வாந்தி எடுத்தான். அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். காபன்ஒட்சைட் புகையினால் வாந்தி ஏற்பட்டது என்பது சிகிச்சையின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

பஸ் நிலையம், தொழில் பட்டறை ஆகியவற்றை மூடுவதற்கும், டேவிட் சில்வா பஸ் கம்பனியிடம் இருந்து நஷ்டஈடு பெற்றுக்கொள்வதற்கும் சேனக்க வழக்கிட விரும்புகிறான்.

ஆராய்க.

7. நிசால் என்பவனால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று ராவன பிரசுரிப்பாளர்களால் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டு இருந்தது. மாத்தறை மாவட்டத்தில் பெரும் தெருக்களை மீள நிர்மாணவம செய்வதற்கு R & R நிர்மாண கம்பனிக்கு வழங்கப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக பின்வரும் விடயங்கள் கட்டுரையில் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

“...உடன்படிக்கை வழங்கப்பட முன்பு தென்பிரதேசத்தில் உள்ள விடுமுறை விடுதி ஒன்றில் வைத்து கம்பனி இயக்குணர்களுக்கும் வீதி அபிவிருத்தி சபையை சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும் விருந்துபசாரம் ஒன்று வழங்கப்பட்டது என்பது நன்கு தெரிந்த நிகழ்வு ஒன்றாகும்”.

“பெருந்தெருக்கள் மீள் நிர்மாணத்தில் எற்பட்டுள்ள அநாவசிய செலவுகளையும் விசேட நிபுணர்கள் என அழைக்கப்படுபவர்களின் நிபுணத்துவம் பற்றியும் அறிந்து

கொள்ள வேண்டுமாயின் இப்பிரதேசத்தில் ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று மைல்கள் தூரம் பிரயாணம் செய்தல் போதுமானது".

இந்த சஞ்சிகை பத்துமுடைய புத்தகசாலைக்கு விற்பனை செய்யப்பட்டது. நிசால் மற்றும் பத்தும் ஆகியோருக்கு எதிராக அவதூறு வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய R& R நிர்மாண கம்பனி தற்போது விரும்புகிறது.

(அ) கம்பனிக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) நிசால் மற்றும் பத்தும் ஆகியோருக்கு இருக்கக்கூடிய எதிர் காப்புக்களை ஆராய்க.

8. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(அ) தீங்கிய சட்டம் மற்றும் காப்புறுதி என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு

(ஆ) போலி சிறைக்கு எதிரான வழக்கு நடவடிக்கை

(இ) கன்னிமை கெடுத்தலுக்கான வழக்கு நடவடிக்கை

(ஈ) பிரியாணி சொய்சா எதிர் ரியான்சி ஆசி குலரத்தின CA 173/94(F) மேன் முறையீட்டு நீதிமன்றம் (அறிக்கை இடப்படாதது).

(பதிப்புரிமை பெற்றது)